
# கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 2 - சிறைச்சாலைக்காரன்



கிருபையை பற்றிக்கொண்டவர்கள் பாகம் ஒன்றில் **லூக்கா 19** ஆம் அதிகாரத்தில், ஆண்டவருடைய கிருபையின் அழைப்பை பற்றி பிடித்துக்கொண்ட சகேயு, எப்படி தானும் தன் வீட்டாரும் இரட்சிக்கப்பட காரணமாய் இருந்தார் என்பதை கண்டோம். இவ்விரண்டாம் பாகத்தில் அப்போஸ்தலர் நடபடிகள் பதினாறாம் அதிகாரத்தில், அப்போஸ்தலராகிய பவுலின் மூலம் வெளிப்பட்ட தேவ கிருபையை, எவ்வாறு ரோம அரசின் சிறைச்சாலைக்காரன் பற்றி பிடித்துக் கொண்டு, அதன் மூலம் தானும் தன் வீட்டாரும் இரட்சிக்கப்பட காரணமாயிருந்தான் என்பதை தியானிப்போம். அப்போஸ்தலராகிய பவுலின் மூலம் சுவிசேஷ வார்த்தையை ஒரு தடவை கூட கேட்டிராத நிலையில், பவுலின் மூலமாய் வெளிப்பட்ட தேவனின் பலத்த கிரியை கண்ட சிறைச்சாலைக்காரன், தான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான் (அப் 16:30). ஒரே நாள் இரவில் நடந்த நிகழ்வுகள், சிறைச்சாலைக்காரன் மற்றும் அவன் வீட்டாரின் வாழ்வை முற்றிலும் மாற்றியதும் அல்லாமல், அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்தானம் பெற்றார்கள் (அப் 16:33). இவ்வளவு துரிதமாய் காரியங்கள் நடைபெற காரணமாய் அமைந்த நிகழ்வுகளை நாம் ஒவ்வொன்றாக தியானிப்போம். இதில் ஒரு சுவாரசியமான காரியம் என்னவென்றால், இறுதி வரை அந்த

சிறைச்சாலைக்காரன் பெயர் கூட எங்கும் பதியப்படவில்லை. முதலாவது சிறைச்சாலைக்காரன் எப்படிப்பட்ட சூழலில் அப்போஸ்தலராகிய பவுலை சந்தித்தான் என்பதை காண்போம்.

அப் 16:12 கூறுகிறது "**அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்.**" பிலிப்பி பட்டணம் ரோமர்களால் நிறைந்திருந்தது என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. மேலும் அப் 16:13-15 வசனங்களில் "**ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.**". இங்கு லீதியாள் என்னும் ஸ்திரீயும், அவள் வீட்டாரும், பவுலின் மூலமாய் கூறப்பட்ட சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்தானம் பெற்றனர் என்பதையும், பவுல் அங்கு தங்கி ஊழியம் செய்து வந்ததையும் நாம் காணலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு சிறிய வார்த்தை "**பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்**" என்பதாகும். ஆம் பவுலின் மூலமாய் கூறப்பட்ட வார்த்தைகளை கேட்கும்படி கர்த்தரே அவள் இருதயத்தை திறந்தருளினார். இதே தேவன், இதே பிலிப்பு பட்டணத்தில், தேவ வார்த்தையை கூறுவதற்கு முன்பே, பவுலின் மூலமாய் தமது வல்லமையை வெளிப்படுத்தி சிறைச்சாலைக்காரனை சந்தித்தார்.

அப் 16:16-18 வசனங்களில் "**நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ**

**இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.“** இங்கு தேவன் தமது வல்லமையை, பவுலின் மூலமாய் விளங்க செய்து, குறிசொல்லுகிற பெண்ணை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்தார். இங்கு நாம் காண்கிற ஒவ்வொரு நிகழ்விலும், லீதியாள முதல் இந்த குறிசொல்லுகிற பெண் வரை அனேகர் ஆண்டவரிடத்தில் இருந்து பல்வேறு விதங்களில் விடுதலை பெற்றனர். ஆனால் இவற்றினால் அப்போஸ்தலராகிய பவுலுக்கு உண்டான நிலையோ எதிர்மறையானது.

**அப் 16:19-21** வசனங்கள் கூறுகிறது **“அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்.“**. ஆம் அப்பெண் விடுதலை பெற்றதை காட்டிலும், அவள் பிசாசிற்கு அடிமைப்பட்டு குறிசொல்லுகிறவளாய் இருப்பதையே, குறிசொல்லுதலை ஆதாயத் தொழிலாக செய்து வந்த அப்பட்டிணத்தார் விரும்பினர். அற்ப காசுக்காக, மனிதர்களையே இப்படிப்பட்ட கேடயங்களாக அங்குள்ளவர்கள் பயன்படுத்தினர். ஆனால் அது அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தினால் தடை செய்யப்படுவதை கண்ட அவர்கள், அவரை ரோம அதிகாரிகளிடம் பொய்யான குற்றச்சாட்டை கூறி ஒப்படைத்தனர். உண்மையில், அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கூறினார், ஆனால் அதை உணராத அவர்கள், பவுல் யூதனாய் இருந்தபடியினால், அவர் யூதமுறைமைகளை பின்பற்ற கூறுவதாக பொய் சொல்லி, அவரை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர். இதன் மூலம் பவுலின் ஊழியத்தை தடை செய்து, தொடர்ந்து மக்கள் பிசாசின் பிடியில் இருப்பதையே இப்படிப்பட்ட எஜமான்கள் (வியாபாரிகள்) விரும்பினர். இப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே அப்போஸ்தலனாகிய பவுல் அதிகாரிகள் கையில் இருந்து சிறைச்சாலைக்காரன் வசம் ஒப்படைக்கப்பட்டார்.

**அப் 16:22,23** கூறுகிறது **“அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி; அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக்**

**கட்டளையிட்டார்கள்.“**. இங்கு சிறைச்சாலைக்காரன் அதிகாரிகளிடம் இருந்து பெற்ற உத்தரவு என்னவென்றால், பவுல் மற்றும் அவரோடு இருந்தவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து போட்டு, அவர்களை அநேக அடிகள் அடிக்க வேண்டும் என்பதாகும். அதாவது சரீர பிரகாரமாகவும், மனதின் பிரகாரமாகவும், அவர்களை அவமானப்படுத்தி துன்பப்படுத்துவதாகும். இதை கட்டாயமாக எந்தவித குறைவும் இன்றி சிறைச்சாலைக்காரன் நிறைவேற்றி இருப்பான். இதன் மூலம் அப்பட்டணத்தில் இருந்த ரோம மக்களின் வாழ்க்கை தரமும், எதையும் காசாக்க நினைக்கும் அதன் வியாபாரிகளின் பொருளாசை நிலையும், ஈவு இரக்கமில்லாத, நியாயம் நீதி என்று எதையும் விசாரிக்காமல், வியாபாரிகள் பேச்சைக் கேட்டு யூதர்கள் என்று கூறிய பொழுது, அவர்களை அவமானப்படுத்த துன்பப்படுத்த நினைத்த பொல்லாத அதிகாரிகளின் நிலையும் பரிதாபத்திற்குரியது. பவுலை சிறையில் அடைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பது இவர்களின் எண்ணம். ஆனால் பவுலை சிறைக்கு அனுப்பினால், சிறைச்சாலையே மாறிவிடும் என்பதை அவர்கள் அப்பொழுது அறியவில்லை.

**அப் 16:24,25** வசனங்களில் **“அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.“**. இங்கு ரோம சிறைச்சாலை அதிகாரியாக அவன், அவனுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைப்படி, பவுலையும் சீலாவையும், கொடூரமாக அநேக அடிகள் அடித்து, அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து, அவர்களை குற்றுயிராக சிறைச்சாலைக்குள் கொண்டு வந்து, அவர்கள் நகரக்கூட முடியாத அளவிற்கு, அவர்கள் கால்களை தொழு மரத்தில் மாட்டி வைத்து விட்டு உறங்கச் சென்றான். இங்கு சிறைச்சாலைக்காரன் பார்வையில், பவுலும் சீலாவும் சாதாரண குற்றவாளிகள், அதிலும் அவர்கள் யூதர்கள், இப்படிப்பட்ட எண்ணமே அவன் இருதயத்தில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்னும் சில மணி நேரங்களில் நடக்க இருக்கும் நிகழ்வுகள், எப்படி தன்னை மட்டுமல்ல, தன் குடும்பத்தையும் மொத்த சிறைச்சாலையையும் மாற்றப் போகிறது என்பதை, அவன் அறியவில்லை. சிறைச்சாலைக்கு வெளியே இருப்போரே இவ்வளவு கொடியோராய் இருந்தால், சிறைச்சாலைக்குள் இருக்கும் காவல் பண்ணப்பட்டவர்கள் எவ்வளவு கொடூரமானவர்களாய் இருப்பர். அவர்கள் மத்தியில் பவுலும் சீலாவும் அடிபட்டு, குற்றுயிராய் கிடக்கின்றனர். ஒருவேளை வலி தாங்காமல் பவுலும் சீலாவும், இரவு முழுவதும் முனங்கி

கொண்டிருப்பார்கள் என்று தான் சிறைச்சாலையில் உள்ள அனைவரும் நினைத்திருப்பர். ஆனால் அதற்கு எதிர் மாறாக நடுராத்திரியிலே பவுலும் சீலாவும், ஜெபம் பண்ணி தேவனை துதித்து பாடினார்கள். இது உண்மையில் காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு ஆச்சரியத்தை தந்திருக்கும். தங்களுடைய சரீரத்திலும் மனதிலும் உள்ள வேதனையை, துன்பத்தை, வெளிக்காட்டாமல் அவர்கள் உற்சாகமாக தேவனை துதித்து பாடி ஜெபித்தது, அங்குள்ள எவரையும் தூங்கவிடாமல், பவுலையும் சீலாவையும் கவனிக்கச் செய்தது. ஆனால் இது எதையும் சிறைச்சாலைக்காரன் அறியவில்லை. அவன் தங்கும் வீடு சிறைச்சாலையோடு இணைக்கப் பட்டிருந்தபடியினால், வீட்டிற்குச் சென்று நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

**அப் 16:26** கூறுகிறது **“சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று.“**. இங்கு யாரும் எதிர்பாராத வண்ணம் சடுதியிலே தேவ வல்லமை அனைவரும் உணரும்படியாய் சிறைச்சாலையின் அஸ்திவாரத்தையே அசைத்தது. இதை கண்ட அங்குள்ள அனைவரும் ஒரு நொடிப் பொழுது என்ன நடக்கிறது என்பதையே உணராதிருந்திருப்பர். ஆனால் அனைவருடைய கட்டுக்களும் கழன்று போன பொழுது, இது பவுலுக்காகவும் சீலாவுக்காகவும் தேவன் செய்யும் கிரியையே என்பதை அனைவரும் அறிந்தனர். ஆம், பிசாசு அவர்களை துன்புறுத்தி, தொழுமரத்தில் மாட்டி வைத்தால் எல்லாம் முடிந்து விடும் என்று நினைத்தான். ஆனால் அதன் மத்தியிலும் அவர்கள் தேவனுக்கு ஏறெடுத்த துதி, நொடிப்பொழுதில் அவர்கள் கட்டுக்களை அறுத்துப் போட்டது. இங்கு தேவ வல்லமையினால், இது நிகழ்ந்தது என்பதை உணர்ந்த சிறைக்குற்றவாளிகள் ஒருவரும், சிறையில் இருந்து தப்பிக்க நினைக்கவில்லை. அவர்கள் எண்ணமெல்லாம் அடுத்தது என்ன நிகழுமோ என்பதையே உற்றுநோக்க செய்தது. ஆனால் இதை எதையும் அறியாமல் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த சிறைச்சாலைக்காரனோ, **“சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான்.“ (அப் 16:27)**. இங்கு ரோம அரசாங்கத்தில் பணியாற்றும் தனக்கு, சட்டப்படி என்ன தண்டனை கிடைக்கும் என்பதை அறிந்திருந்த சிறைச்சாலைக்காரன், எதையும் விசாரிக்காமல் சிறைச்சாலை உள்ளே கூட நுழையாமல், இதனால் உண்டான பாதிப்பு தன்னோடு போகட்டும், தன் குடும்பத்திற்கோ, தன்னோடு பணியாற்றும் மற்றவர்களுக்கோ, தண்டனை வர வேண்டாம் என்று எண்ணி, முழு பொறுப்பையும் தான் ஏற்று, தன்னை

மாய்த்துக் கொள்ளப் போனான். ஆனால் சிறைச்சாலைக்காரன் செய்ய இருப்பதை தன் ஆவியில் உணர்ந்த பவுலோ **“பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.“ (அப் 16:28)**. ஒருவேளை ஒரு சில மணித்துளிகள் தாமதித்திருந்தாலும், சிறைச்சாலைக்காரன் தன்னைத்தான் மாய்த்து கொண்டு இருப்பான். ஆனால் அதுவல்ல தேவ நோக்கம், அவனும் அவன் வீட்டார் அனைவரும் அன்று இரவே இரட்சிக்கப்பட்டு ஞானஸ்தானம் பெற வேண்டும் என்பதே தேவத்திட்டம்.

**அப் 16:29,30** வசனங்களில் **“அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்.“**. இங்கு சிறைச்சாலைக்காரன் இருதயத்தை ஆண்டவர் திறந்தருளினார். எப்படி லீதியாள் எனும் ஸ்திரீயானவள் கர்த்தருடைய வசனங்களை கவனிக்கும்படியாய் அவள் இருதயத்தை திறந்தருளினாரோ, அப்படியே சிறைச்சாலைக்காரன் தான் அங்கு கண்ட காட்சியின் மூலம், பவுலையும் சீலாவையும் பற்றியும், அவர்களோடு கூட இருக்கும் தேவ வல்லமை பற்றியும், தான் அதற்கு கீழ்படிய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தையும் பெற்றான். அந்த குறிசொல்லுகிற பெண் கூறியபடி **“இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்“ (அப் 16:17)** என்பதை சிறைச்சாலைக்காரன் உணர்ந்து கொண்டான். எனவே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நேரடியாக கேட்டான். இதை சரியாக பயன்படுத்திக் கொண்ட பவுலும் சீலாவும், தங்களுடைய சரீர நிலையையும், சூழ்நிலையையும் பாராமல், **“அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.“ (அப் 16:31,32)**. யார் கையால் கொடூரமான அடியை சில மணி நேரத்திற்கு முன் வாங்கினோமோ, அதை சற்றும் நினையாமல், சோர்வடைந்திருந்த தங்களை காப்பாற்ற சொல்லி சிறைச்சாலைக்காரனிடம் கேட்காமல், அந்த சரீர வேதனைகள் மத்தியிலும் கர்த்தருடைய வசனத்தை போதித்தார்கள். இது சிறைச்சாலைக்காரனுக்கு மட்டுமின்றி, சிறையில் இருந்து தப்பிச் செல்லாமல் உறைந்து போன நிலையில் இருந்த மற்ற குற்றவாளிகளுக்கும், இதர சிறை காவலர்களுக்கும், அவன் வீட்டாருக்கும், புரிந்து கொள்ள முடியாத ஒரு அனுபவமாயிருந்தது. பவுல் சீலா, மூலமாய் கர்த்தருடைய வசனத்தை கேட்ட சிறைச்சாலைக்காரன் சற்றும்

தாமதியாமல் **“மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.“ (அப் 16:33)**.

ஆம், தான் ஏற்படுத்தின காயங்களை தானே கழுவினது மட்டுமல்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்படிந்து, அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்தானம் பெற்றார்கள். எப்படி சகேயு மனந்திரும்பின பொழுது, ஆண்டவர் இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று கூறினாரோ **(லூக் 19:9)**, அதே போல் இங்கு சிறைச்சாலைக்காரன் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. மற்ற குற்றவாளிகள், சிறைக்காவலர்கள் பற்றி எதுவும் பதியப்படாதிருந்தாலும், நிச்சயமாக இந்த நிகழ்வு அவர்கள் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு வித மாற்றத்தை கொண்டுவந்திருக்கும். அதற்கு காரணம் சிறை குற்றவாளிகளில் ஒருவரும் அங்கிருந்து தப்பிக்க முயலவில்லை. அதற்கு பதிலாக தேவ வல்லமையின் அனுபவத்தை அங்கிருந்து உணரவே விரும்பினர். **அப் 16:34** கூறுகிறது **“பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.“**. இங்கு சிறைச்சாலைக்காரன் மற்றும் அவன் வீட்டார் அனைவரும், இரட்சிப்பை, ஞானஸ்தானத்தை பெற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், ஆண்டவரிடத்தில் விசுவாசமாயிருப்பதைப் பற்றியும், ஆண்டவருக்குள் மனமகிழ்ச்சியாக இருப்பதை பற்றியும் அறிந்து கொண்டனர். ஆண்டவர் பவுல், சீலா ஆகியோரது வேதனைகளையும் நீக்கி, அவர்களும் சிறைச்சாலைக்கு வெளியே தாங்கள் செய்த ஊழியத்தின் பலனை காட்டிலும், சிறைச்சாலைக்குள் அடிபட்டு, அவமானப்பட்டு, வேதனை மத்தியில் இருந்த நிலையில், வெளிப்பட்ட தேவ வல்லமை மூலம் பெரிதான பலன் கிடைத்ததை கண்டு, அவர்கள் சிறைச்சாலைக்காரன் வீட்டில் யோஜனம் அருந்தி, அவன் வீட்டாருக்கு தேவன் பாராட்டின கிருபைக்காக தேவனை ஸ்தோத்தரித்தனர். இவை யாவும் ஒரே நாள் இரவில் நடந்து முடிந்தது.

**அப் 16:35,36** கூறுகிறது **“பொழுது விடிந்தபின்பு: அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள். சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான்.“**. இங்கு பவுல், சீலா ஆகியோரிடம்

எந்த குற்றத்தையும் காண முடியாத அதிகாரிகள், அவர்களை பயப்படுத்தி வேதனைப்படுத்தியதால், அவர்கள் பயந்து அவ்விடத்தை விட்டு சென்று விடுவர் என்று எண்ணி அவர்களை விட்டு விட சொன்னார்கள். ஆனால் உண்மையில் சிறைச்சாலையில் நடந்ததை அப்பொழுது அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் **"அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும் என்றான்." (அப் 16:37)**. இங்கு பவுல் தாங்கள் எந்த குற்றமும் செய்யாதவர்கள் என்பதை மனுஷர் முன்பாகவும் வெளிப்படுத்தி காண்பிக்கவும், ரோம சட்டத்தின்படியே, ரோம குடிமகனாகிய தான் விசாரிக்கப்படாமல் தண்டிக்கப்பட்டது தவறு என்பதையும் வெளிப்படுத்துகிறார். இதனால் **"சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து, அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டுபோய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப்போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்." (அப் 16:38-40)**. இங்கே குற்றச்சாட்டப்பட்டவராய், யூதர் என்ற அடையாளத்தோடு இருந்த பவுலை, தாங்கள் எந்த கேள்வியும் கேட்காமல் தண்டிக்கலாம் என்ற எண்ணத்தோடு இருந்தவர்கள், பவுலிடம் தயவாய் பேசி அவரை பட்டணத்தை விட்டு போகும் படி கேட்டுக் கொண்டனர். இங்கு முந்தின நாள் மாலை பொழுதில், அதிகாரிகளின் உத்தரவின் பேரில், தேவனைப் பற்றியோ, யூத மக்களைப் பற்றியோ, சுவிசேஷத்தை பற்றியோ, எந்த புரிதலும் இல்லாதிருந்த சிறைச்சாலைக்காரன், கொடூரமாய் அடித்து துன்பப்படுத்தி, வஸ்திரங்களை கிழித்து வேதனைப்படுத்தி, சிறைச்சாலைக்குள் கொண்டு வந்து, தொழுமரத்தில் மாட்டி வைத்த பவுலையும் சீலாவையும், விடியற்காலையில், தனக்கு தேவனுடைய சுவிசேஷத்தை அறிவித்து, ஞானஸ்தானம் கொடுத்து, தான் தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவனாகி மனமகிழ்ச்சியாக இருப்பதற்கு காரணமாய் இருந்த, ஆவிக்குரிய தகப்பன் மாராய் அவர்களை வழி விட்டு அனுப்பியிருப்பான்.

அதிகாரிகள் பவுலையும், சீலாவையும் அனுப்பி விட்டால் இனி சுவிசேஷம் அறிவிக்க யாரும் இல்லை, அதனால் பட்டணத்தில் தேவையில்லாமல் பிரச்சனை வராது என்று எண்ணியிருப்பர். ஆனால் பவுலும், சீலாவும் அவ்விடம் விட்டு வெளியேறும் முன்பு, பெயர் குறிப்பிடப்படாத அந்த

சிறைச்சாலைக்காரனை, ஆண்டவருடைய சாட்சியாக நிறுத்திவிட்டே சென்றனர். அவன் மாத்திரமல்ல, இரவில் நடந்த காரியங்களை கண்ட மற்ற சிறைக்காவலர்களும், சிறைக்குற்றவாளிகளும் கூட மன மாறுதல் அடைந்திருப்பர். இப்படியாக ரோம குடிமகனாகிய, ரோம அரசாங்கத்திற்காக வேலை செய்யும் சிறைச்சாலைக்காரன், இனி தேவனுடைய ராஜ்ஜியத்தின் குடிமகனாய், தேவ இராஜ்ஜியத்திற்காக பணியாற்றும் நபராய் மாறிப்போனான். இவை அனைத்தும் ஒரே நாள் இரவில் அவன் வாழ்க்கையில் நடந்தது. எனவே சிறைச்சாலைக்காரன், அந்த நடு இரவில் தான் இருந்த இடமே அசையத்தக்கதாக, பவுலின் மூலமாக விளங்கிய தேவ வல்லமையின் கிருபையை, சரியாய் பற்றி கொண்டவனாய், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாக கேட்டறிந்து, அதன்படியே செய்ததால், அவனும் அவனுடைய அனைவரும் இரட்சிப்பை பெற்று, தேவனுக்கு சாட்சிகளாய் மாறினர். கொடூர சிறைச்சாலைக்காரனாய் இருந்த அவன், ஒரே நாள் இரவில் கிடைத்த கிருபையின் மூலமாய், தேவ ராஜ்யத்தின் குடிமகனாய், சபையின் அங்கமாய் மாறிப்போனான். பவுலின் வாழ்க்கையில் எப்படி, சவுல் பவுலாய் மனம் திரும்பினாரோ, அவ்வாறே சிறைச்சாலைக்காரன் வாழ்வும், ஒரே நாள் இரவில் தலைகீழாய் மாறிப்போனது. நம் வாழ்விலும் தேவன் இப்படிப்பட்ட தருணங்களை தரும் பொழுது, அதை சரியாக பயன்படுத்தி, தேவனிடமிருந்து மேலான, நித்திய ஆசிர்வாதங்களை பெற்று, சிறைச்சாலைக்காரனை போல் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்வோமாக. ஆமென், அல்லேலுயா.